[திரு. எஸ். வி. இராமசாமி] [1978 மார்ச் 22

அடுத்து, துறையூரில் உள்ள கண்டசாரி தொழிற்சாலை உயிரற்று இருக்கிறது. செயல்படாமல் இருக்கிறது. தொழிற் கருவிக் கூடங்களைக் கொண்ட தொழிற்சாலையை அமைக்க இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

துறையூரிலுள்ள பெரிய பிரச்னை என்னவென்றால் தொழிலாளர்கள் பிரச்னைதான். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். அண்மையிலேகூட அவர்கள் போராடினார்கள். அவர்களுடைய தொழிலை மேம்பாடு செய்வதற்கான வசதியற்ற நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, மேஜர் ப்ராஜக்ட் என்று மாஸ்டர் வீவர்ஸ் வருகிறார்கள். துறையூரிலே அமைத்தால், துறையூருக்கு அருகாமையில் பல நெசவாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஒருங்கிணைந்த தொழிற்சாலையை உருவாக்குவது மிகவும் தேவை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தரிசு நிலங்களாக இருக்கின்ற விவசாய நிலங்களை ஒன்றாகச் சேர்த்து சிறு வசதி படைத்தவர்களுக்கு மேலும் வசதி செய்து, தரிசு நிலங்களை ''வேளாண்மைத் தொழிற்சாலை'' யாக உருவாக்குவது பலன் உள்ளதாக இருக்கும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, முனைப்புடன் இந்த மானியக்கோரிக்கையின்மீது சொல்லிக்கொள்வது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். பெரம்பலூரிலே பண்டித ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை உண்மையிலேயே திருச்சி மாவட்டத்திற்குப் புகழைத் தருவதாக, திருச்சி மாவட்டத்திற்கு மகிழ்வு தருவதாக அமைந்திருக்கிறது என்பதை வல்லமை படைத்த பெருமையுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். வல்லமை படைத்த உயர் அதிகாரிகளின் உழைப்பால் உண்மையிலேயே மிகவும் சீராக, சிறப்பாக நடைபெறுவதை நானே நேரில் பார்த்தேன். அருமையான சர்க்கரை, கரும்பு அரைவை, கரும்பு சேதாரம் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்கேயுள்ள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் சீராகவும், சிறப்பாகவும் அது வளர்ந்து வருவதற்குப் பாராட்டாகச் சொல்லிக்கொள்கிறேன். அங்கே அது மேலும் மேலும் வளர்வதற்கு வேண்டுமானால் இரண்டு பெரும் குறைகளைக் களைவது அரசினுடைய தலையாய கடமை என்பதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்வேன்.

முதலாவதாக, சாலை பராமரிப்பு. அங்கே சாலை அபிவிருத்தி தேவை. கிராமத்திலேயிருக்கின்ற கரும்புகளைக் கொண்டுவருவதற்கும், ஆலைகளிலே உற்பத்தியாகின்ற சரக்குகளை வெளியில் கொண்டு செல்லவும் சாலைகளை மிகவும் சீர்திருத்தம் செய்ய வேண்டும். கீழமாத்தூரிலிருந்து 9 கிலோ மீட்டர் தூரமுள்ள ஒகளூர் வரை செல்லும் சாலை, 11 கிலோ மீட்டர் தூரமுள்ள கீழமாத்தூர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து

வாலிசெளந்திர சோழபுரம் செல்லும் சாலே, 5 கிலோ மீட்டர் தூரமுள்ள பெரியாக்குறிச்சியிலிருந்து மாத்தூர் இரயில்வே ஸ்டேஷன் செல்லும் சாலே, 11 கிலோ மீட்டர் நீளமுள்ள திட்டக்குடி பார்டரிலிருந்து சன்ஞசி நல்லூர் செல்லும் சாலே ஆகிய இந்தச் சாலேகளே உடனடியாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். கரும்பு கொண்டு வருவதற்கு கிராமங்களுக்கும் இணைப்புச் சாலேகள் தேவை. எனவே, இருக்கின்ற சாலேகளே உடனடியாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். செம்மையாக அந்த ஆலே இருக்க வேண்டுமென்ருல், நல்ல முறையில் அதன் செயல் ஓங்க வேண்டுமாஞல் அங்குள்ள வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்பதற்கு இந்தச் சாலேகள் மிகவும் தேவை.

வயலப்பாடியிலிருந்து எரையூர் வரை செல்ல வேண்டுமென்ருல், 30 கிலோ மீட்டர் அதிகமாகச் சுற்றி வருவதைத் தவிர்க்க வேண்டுமென்ருல், வயலப்பாடியிலிருந்து எரையூருக்கு நேரடியாக ஒரு பாதை தேவை. அவ்வாறு செய்தால் அரியலூர் தாலூகாவிலேயிருந்து மாத்தூர், செந்துரை பிர்க்காக்களிலிருந்து கரும்புகளேக் கொண்டு வருவதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நீர்ப்பாசன வசதிகளேப் பொறுத்தவரையில், சில ஆலேகளின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் நீர்ப்பாசன வசதி மிகவும் தேவை. சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்படி 1977—78 ஆம் ஆண்டில் அரசு ஆணே 1708, தேதி 14—11—77 இன் பேரிலே இதற்காக ஒதுக்கப்பட்ட தொகையான சுமார் இரண்டரை கோடி ரூபாய். அதிலே சுத்தமல்லி நீர்ப்பாசனத் திட்டத்திற்காக 25 இலட்சம் ரூபாய் செலவிடப்பட வேண்டியது செலவழிக்கப்படவில்லே. உடனடியாக அரசு அதைக் கண்ணுற்று சுத்தமல்லி நீர்ப்பாசனத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் உடையார்பாளேயத்தில் அதிகமான அளவில் கரும்பை விளேவிக்க முடியும்.

அந்தப் பகுதியிலே பூலாம்பாடி, பாண்டகபாடி, தேனூர், சிறுவாச்சூர், வேப்பந்தட்டை, புதுநவேலூர், தொரமங்கலம் போன்ற ஏரிகளுக்கு அருகிலே இருக்கும் ஓடைகளில் அணே கட்டுவதற்கு, அதற்கான மதிப்பீடு சென்ற அரசு ஆணேயிலே இருப்பதால் அந்த மதிப்பீட்டின்படி உடனடியாக அணே கட்டவும், நீர்ப்பாசனத்தைப் பெருக்கவும் ஆவன செய்தால் அந்தத் தொழிற்சாலே மிகவும் நல்லமுறையில் இயங்கி நம்முடைய தமிழ் மக்களும், நாடும் வியக்கும் வண்ணம் வளரும், செழிக்கும் என்று சொல்லிக்கொள்வது என்னுடைய தலேயாய கடமை என்று கூறி என்னுடைய இந்தக் கருத்துக்களே வைத்து அமர்கிறேன்.

[முற்பகல் 11–20].

7. அமைச்சரின் அறிக்கை.

பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் கோரிக்கைகள் மீது அரசு எடுத்த முடிவுகள் குறித்து கல்வி அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, பேரவையின் விதி 82-ன் கீழ் பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள் கோரிக்கைகள்மீது அரசு எடுத்திருக்கிற முடிவினை அறிக்கையாக வைக்கிறேன்.

1977 செப்டம்பர் திங்களில் வெளியிடப்பட்ட கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களை மாற்றியமைத்து வழங்கப்பட்ட ஆணைகள் குறித்து கல்லூரி ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட முறையீடுகள்மேல் அரசு கவனமாகப் பரிசீலித்த பின்னர் கீழ்க் கண்ட முடிவுகளை மேற்கொண்டுள்ளது.

(1) அரசு ஆணை எண், 2106, கல்வி, தேதி 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் நாள், 2107, கல்வி. தேதி 21—9—1977 மற்றும் 2159, கல்வி, தேதி 26—9—1977 ஆகிய ஆணைகளில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களின் ஊதிய விகிதங்கள் 1—4—1976 முதல் நிர்ணயிக்கப்பட்டு 1—1—1977-ல் இருந்து பணப்பயன் அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இதற்குப் பதிலாக 1—1—1974-ல் இருந்து இவ்வாசிரியர்களின் ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டு 1—1—1977-ல் பணப்பயன் வழங்கப்படும் என்று அரசு இப்போது முடிவு செய்துள்ளது. மேலும் தற்பொழுது மாற்றியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்கீழ் ஆசிரியர்களின் சம்பளம் நிர்ணயிக்கப்பட்ட பிறகு அடுத்த கட்ட ஊதிய உயர்வு பழைய ஊதிய விகிதத்தில் இவ்வாசிரியர்கள் எத்தேதியில் பெற்று இருப்பார்களோ அதே தேதியிலிருந்து புதிய ஊதிய விகிதத்தில் ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

அரசுக் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் உள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர் பதவிகள் படிப்படியாக நீக்கப் பெறுதல் வேண்டும் என்ற முடிவினை அரசு மேற்கொண்டுள்ளது. வருங்காலத்தில் கல்லூரிகளில் பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் நியமிக்கப்படமாட்டார்கள். தற்பொழுதுள்ள பட்ட மேற்படிப்பு தகுதியுள்ள பயிற்றுநர் மற்றும் விளக்குநர்கள் 5 ஆண்டு பணி முடிவுற்றவுடன் உதவி பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்று அரசு ஆணை எண் 2659, நாள் 28—12—1977-ல்